# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 105 • திங்கள் Monday • 13.07.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode


# பாடகி எஸ்.ஜானகியின் உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம்

## குடியரசுத் தலைவர் முர்மு, பிரதமர் மோடி, முதலமைச்சர் விஜய் புகழ் அஞ்சலி





பிரபல பின்னணி பாடகி இசைக்குயில் எஸ். ஜானகி உடல்நலக்குறைவால் உயிரிழந்த நிலையில், அவரின் உடல் மைசூரில் உள்ள மகாராஜா கல்லூரி மையதானத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அவரின் உடலுக்கு ஏராளமான திரைத்துறையினர் மற்றும் பொதுமக்கள் நேரில் அஞ்சல் செலுத்தி வருகின்றனர். கர்நாடகா முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் மறைந்த பாடகி எஸ். ஜானகி உடலுக்கு முழு அரசு மரியாதை வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

பிற்பகல் 3 மணி வரை பொதுமக்கள் அஞ்சலுக்கு அவரின் உடல் வைக்கப்பட்ட நிலையில், மாலை 5 மணியளவில் கணியன ஹுண்டி பகுதியில் உள்ள அவரது பண்ணை வீட்டில் நல்லடக்கம் செய்யப்துபட்டட்து. முன்னதாக, ஜானகியின் வளர்ப்பு மகன் நவீன் இறுதி சடங்குகளை மேற்கொண்டார்.

தன்னுடைய இசைத்திறமையால் இந்திய திரையுலகில் நீங்காத இடத்தைப் பிடித்த மிக சிறந்த ஆளுமையான ஜானதியி' மறைவிற்கு குடியரசு தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி மத்திய அமைச்சர் அமித் ஷா,பல்வேறு மாநில முதலமைச்சர்கள், திரைத்துறையினர், அரசியல் தலைவர்கள் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இசையமைப்பாளர் இளையராஜா, கவிஞர் வைரமுத்து, இசையமைப்பாளர் அனிருத், நடிகை ராதிகா சரத்குமார், நடிகர்கள் எம்.ஆர். பாஸ்கர், சிம்பு, கார்த்தி, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் ஜானகியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1938 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச மாநிலம், குண்டூர் மாவட்டம், பாலபட்டலா கிராமத்தில் பிறந்தவர் எஸ்.ஜானகி. தனது சிறு வயதிலேயே பாடத் தொடங்கிய எஸ். ஜானகி, நாதசுர மேதை பைடிசாமி என்பவரிடம் முறையான இசைப்பயிற்சியை பெற்றார். பின்னர் சென்னைக்கு இடம்பெயர்ந்த அவர், திரைப்படத்துறையில் பணியாற்ற தொடங்கினார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட 20 மொழிகளில் சுமார் 48,000-க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.தமிழ்,மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் பாடிய பாடல்களுக்காக 4 முறை தேசிய விருது பெற்றவர். தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் 30-க்கும் மேற்பட்ட அரசு விருதுகளை பெற்றவர். தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றுள்ளார்.

புகழ்பெற்ற பின்னணி பாடகர் எஸ்.ஜானகி அம்மாவின் மறைவால் இந்தியா ஒரு இசை சிகரத்தை இழந்துள்ளது. அவரது அபாரமான குரல்வளம் பல தலைமுறையினரை மெய்சிலிர்க்க வைத்தது.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த அவரது சிறப்பான இசைப்பயணத்தில் இந்தி, ஒடியா, துளு, உருது, பஞ்சாபி, பெங்காலி உள்ளிட்ட சுமார் 20 இந்திய மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களை அவர் பாடியுள்ளார். காலத்தால் அழியாத அவரது இசை என்றும் மதிப்புமிக்கதாகத் திகழும். அவரது குடும்பத்தினருக்கும் எண்ணற்ற ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்." என்று கூறியுள்ளார்.

குறிப்பாக,, தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்,கர்நாடகா முதலமைச்சர் டி. கே.சிவக்குமார், ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், சிரஞ்சீவி உள்ளிட்ட பிரபலங்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி: "புகழ்பெற்ற பின்னணி பாடகர் எஸ்.ஜானகி அம்மாவின் மறைவு, இசை மற்றும் கலாச்சார உலகுக்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பு. பல்வேறு மொழிகளில் அவர் பாடிய பாடல்கள் பல தலைமுறையினரிடையே பெரும் வரவேற்பை பெற்றவை. இணையற்ற நலினத்துடனும் பன்முகத்தன்மையுடனும் ஒவ்வொரு உணர்வையும் தனது குரல்வளம் மூலம் வெளிப்படுத்தியவர் அவர்.

அவரது இனிமையான பாடல்கள் வருங்காலத்திலும் கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும். துயரமான இத்தருணத்தில் அவரது குடும்பத்தினருக்கும், எண்ணற்ற ரசிகர்களுக்கும், ஒட்டுமொத்த இசை சமூகத்துக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓம் சாந்தி." என்று தெரிவித்துள்ளார்.

இவை அனைத்துக்கும் மேலாக இசை ரசிகர்களின் அன்பையும், ஆரவாரத்தையும்தான் பெரிய விருதாக மதித்தவர்.அவரது மறைவு இசை ரசிகர்கள் அனைவருக்கும் பேரிழப்பு. இசையரசி எஸ்.ஜானகி அம்மையாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், இசையுலகினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று கூறியுள்ளார்.

# ஓடவில்லை.. ஒளியவில்லை.. பதுங்கவில்லை முதலமைச்சர் விஜய்க்கு எ.வ.வேலு பதிலடி





தமிழகத்தில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலைகளை மேம்படுத்த ரூ.5 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. எந்த இடத்திலும் பணிகளே நடைபெறாத நிலையில், முன்கூட்டியே தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு கோடிக்கணக்கில் தொகை விடுவிக்கப்பட்டு முறைகேடு நடந்துள்ளதாக அறப்போர் இயக்கம் சார்பில் லஞ்ச ஒழிப்புத் துறையில் கடந்த 2022-ம் ஆண்டு புகார் அளிக்கப்பட்டது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நடந்து, தவெக அரசு அமைந்த பிறகு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, துறை அதிகாரிகள்,தனியார் ஒப்பந்ததாரர்கள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். எ.வ.வேலு மற்றும் தொடர்பு உடையவர்களின் வீடுகளில் கடந்த ஜூன் 25-ம் தேதி சோதனை நடத்தினர். அடுத்த நாளான 26-ம் தேதி எ.வ.வேலு மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றார் அங்கு உள்ள மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதற்கிடையில், கரூரில் நேற்று முன்தினம் நடந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்-அமைச்சர் விஜய் பேசுகையில், ஒருவர் வெளிநாட்டில் போய் ஒளிந்து கொண்டார். வெளிநாடு என்றதும், ஸ்டாலின் சார் என்று நினைத்துவிட போகிறீர்கள். அவர் இல்லை. எனக்கு எப்போதுமே ஸ்டாலின் சார் மேல் தனி பாசம் உண்டு. அவர் கிடையாது. சிங்கப்பூருக்கு செக்கப்புக்கு போனாரே அவர் என்று எ.வ.வேலுவை தாக்கி விஜய் பேசினார்.

இந்த நிலையில், திமுக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மருத்துவ சிகிச்சை முடித்துக்கொண்டு சிங்கப்பூரில் இருந்து இன்று சென்னை திரும்பினார். சென்னை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது :- சிங்கப்பூரில் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் 2016 முதல் இதயப் பிரச்சினைக்கு சிகிச்சை பெற்று வருகிறேன்; சிங்கப்பூர் செல்ல கடந்தமாதம் 15ம் தேதியே விசாவுக்கு விண்ணப்பித்தேன். 15ம் தேதி விண்ணப்பித்து விசா கிடைத்தவுடன் 17ம் தேதி டிக்கெட் எடுத்தேன். சிங்கப்பூர் புறப்பட்டுக் கொண்டிருந்த அன்றுதான் போலீசார் சோதனைக்கு வந்தார்கள். போலீசார் சோதனைக்கு வந்ததால் சிங்கப்பூர் பயணடிக்கெட்டை மாற்றிப் செய்தேன். லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டதால் அன்று முழு ஒத்துழைப்பு கொடுத்தேன்.

ஒவ்வாமை, நரம்பு மற்றும் இதயம் சார்ந்த பிரச்சனைகள் எனக்கு உள்ளது; சிங்கப்பூரில் ஜூன் 29ம் தேதி நியூரோ பிரச்சனைக்காக சிகிச்சை பெற்றேன்; 30ம் தேதியன்று வயிறு தொடர்பான பிரச்சனைக்கு சிகிச்சை பெற்றேன்; ஜூலை 3-ம் தேதி இதய மருத்துவரிடம் சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளது; அவற்றை காண்பிக்க தயார்.

ஜூலை 3ஆம் தேதி ஆஜராகசம்மன் கொடுக்கப்பட்டது. அதற்கு உரிய மரியாதை கொடுத்து பதில் கடிதம் கொடுத்தேன். ஜூலை 3இல் கொடுத்த சம்மனுக்கு 10 நாள்களுக்குப்பிறகு வருவதாக கடிதம் மூலம் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு பதில் அளித்தேன். மீண்டும் 9ஆம் தேதி வரச்சொல்லி லஞ்ச ஒழிப்புத் துறை சம்மன் அளித்தது. விசாணைக்கு ஒத்துழைப்பதாக நான் கூறியும் ஓடுகிறேன். ஒளிகிறேன் எனக் கூறுகின்ற னர்.

நான் ஓடவில்லை.ஒளியவில்லை. பதுங்கவில்லை; ஒடுவது, ஒளிவது, பதுங்குவது திமுகவினரின் பழக்கம் இல்லை. திமுக எங்களை அப்படி வளர்க்கவில்லை; நான் எந்த குற்றமும் செய்யவில்லை,வரும் 15-ம் தேதி விசாரணைக்கு ஆஜராவேன். ஒத்துழைப்பதாக எனது பயணம் பற்றி தங்களின் கற்பனைகளை அவிழ்த்துவிட்டுள்ளனர். இவ்வாறு கூறினார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் 18ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் நாளை முதல் வரும் 18-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் நாளை (ஜூலை 13) முதல் வரும் 18-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். அவ்வப்போது ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 16-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஒரிரு இடங்களில் 7 டிகிரி ஃபாரன்ஹீட் அளவு வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழக கடலோர மீனவர்களுக்கு வரும் 14-ம் தேதி வரை எச்சரிக்கை ஏதும் இல்லை.

தமிழகத்தில் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் 2 செமீ மழை பதிவாகியுள்ளது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் எஸ்சி பிரிவு புதிய தலைவராக ஐ.பிரபு நியமனம்



தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்சி துறை மாநில தலைவர் எம்பி ரஞ்சன்குமார், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் எஸ்சி பிரிவு தலைவராக ஐ.பிரபுவை நியமித்தார். இதனைத்தொடர்ந்து, மாநில தலைவர் எம்பி ரஞ்சன்குமாரை ஐ.பிரபு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றதோடு,தனது புதிய பதவிக்கான அதிகாரப்பூர்வ நியமன கடிதத்தையும்பெற்றுக்கொண்டார். மாநில துணை த்தலைவர் கோவை காந்தியின் பரிந்துரையால் தனக்கு கிடைத்த இந்த வாய்ப்பிற்காக ஐ. பிரபு அவருக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

இதனை முன்னிட்டு ஈரோடு ஜவஹர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில்,ஐ.பிரபுஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பாவை சந்தித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களை பெற்றார். முன்னாள் மாவட்ட தலைவர்கள் டி.திருசெல்வம், ஈ.பி.ரவி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டிசிடியூ) மாநில துணைத்தலைவர் குளம் எம்.ராஜேந்திரன், மாவட்ட துணைத்தலைவர் கே.எஸ்.செல்வம், நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சி.மாரிமுத்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத்தலைவர் கே.என்.பாஷா, முன்னாள் கவுன்சிலர் கை. சுப்பிரமணியம்,மாவட்ட நிர்வாகிகள் ராஜாஜிபுரம் சிவா, பி.குமரேசன் மற்றும் சங்கர், அன்பரசு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகரின் மையப்பகுதியில் உள்ள காரப்பள்ளம் ஓடையை தூர் வாரும் பணி நேற்று (ஜூலை12) துவங்கப்பட்டது. இப்பணியினை வருவாய்மற்றும்பேரிடர்மேலாண்மைதுறைஅமைச்சர்கே.ஏ.செங்கோட்டையன்துவக்கிவைத்தார்.நகர்மன்றதலைவர். நாகராஜ், நகராட்சி ஆணையாளர் .மங்கையர்க்கரசன் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி "காபி வித் கலெக்டர்" நிகழ்ச்சியில் விளையாட்டில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி "காபி வித் கலெக்டர்" நிகழ்ச்சியில் விளையாட்டில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவியர்களுடன் (11.07.2026) அன்று கலந்துரையாடினார்.

நடைபெற்ற "காபி வித் கலெக்டர்" என்ற நிகழ்ச்சியில் பேசும் போது தெரிவிக்கையில் தமிழ்நாடு அரசு விளையாட்டு துறையில் அதிக முக்கியத்துவம் தந்து பல்வேறு அரசு நலத்திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் மாணவர்களுக்கு தேவையான உயர்கல்வி விளை யாட்டின் மூலம் மத்திய அரசு மாநில அரசு வேலைவாய்ப்பு குறித்தும், கல்வியை போலவே விளையாட்டு மாணவர்களுக்கு மிக முக்கியம் என்றும், விளையாட்டு துறையில் மாணவ மாணவர்களுக்கு 3% அரசு வேலையில் இட ஒதுக்கீடு உள்ளது என்பதையும். மாணவர்களுக்கு ஏற்படும் தளங்களை எவ்வாறு சரி செய்ய வேண்டும் அவற்றை எவ்வாறு கையாள வேண்டும் என்பதுபற்றியும்,விளையாட்டு உடல்நிலையை பாதுகாக்கும் என்றும் அணியின் ஒற்றுமையே விளையாட்டின் முக்கியமான சிறப்பாகும். ஒவ்வொரு விளையாட்டுவீரர்களும் தனக்கு முன்மாதிரியாக ஒரு விளையாட்டு வீரர் வைத்து அவர்களை போலவே விளையாட்டில் சிறந்த விளங்கவேண்டும் என்றும். போட்டி தேர்வுகளில் கலந்து கொள்ளும் அனைவரும் ஒவ்வொரு தேர்வையும் எவ்வாறு கையாள வேண்டும் அதற்கு எவ்வாறு அவர்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மாணவர்களுக்கு முக்கியமாக திருக்குறளின் அன்பு, அறிவு, அருள், அறிவுடைமை, ஆகியவற்றின் விளக்கத்தையும் எடுத்துக் கூறினார். அரசு வழங்கும் விளையாட்டு வசதிகள் மற்றும் ஊக்கத்திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் சாதனை படைக்கவேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தனது அரசுப்பணியில் சேர்ந்த பிறகு சந்தித்த நிகழ்வுகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டதுடன், மாணவ, மாணவியர்களின் பள்ளியில் ஏற்பட்ட சுவாரசியமான நிகழ்வுகள் மற்றும் கோரிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

நடைபெற்ற காபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில், ஈரோடு வட்டாரத்திற்குட்பட்ட அரசுப்பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த 38 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். கலந்துகொண்டமாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருக்குறள் புத்தகங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி. மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) ஆர்.கேசவக்குமார். மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் எஸ்.சாலமன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செங்குந்தர் கல்விக் கழகம் சார்பில் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் புத்தாக்கப் பயிலரங்கம்



ஈரோடு செங்குந்தர் கல்விக் கழகம், சார்பில் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தும்நோக்கில்"கற்பித்தல் புத்தாக்கப் பயிலரங்கம்" ஜூலை 11ம் தேதி அன்று ETH தோட்டம் அவல் பூந்துறையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு செங்குந்தர் கல்விக் கழகத்தின்தலைவர்V.V.C.R.M.K. முருகேசன் வரவேற்புரை நல்கினார். செயலாளர் S. சிவானந்தன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, தலைமையுரையாற்றி, கல்வியில் புதுமையான கற்பித்தல் முறைகளின் அவசியத்தைவலியுறுத்தினார். முன்னிலையாக முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் E.மான்விழி , மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) பொ. இரவிக்குமார் , மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) R. கேசவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். முனைவர் வை. குமார், இணை இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் நவீன கற்பித்தல் உத்திகள்,வகுப்பறைச்செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். இவ்விழாவில் செங்குந்தர் கல்விக் கழகத்தின் இணைச் செயலாளர், தாளாளர்கள்,நிர்வாகக் குழு உறுப்பினர்கள், நிர்வாக அலுவலர், ஆறு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், 200 ஆசிரியர்கள், 120 ஆசிரியல்ல பணியாளர்கள் என அனைவரும் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் ஆசிரிய, ஆசிரியைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.இந்த புத்தாக்க பயற்சினை தலைமையேற்று துவக்கிவைத்த மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி அவர்களுக்கு செங்குந்தர் கல்விக்கழக நிர்வாகத்தினர் நினைவு பரிசு வழங்கி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக செங்குந்தர் கல்விக் கழகத்தின் பொருளாளர் C. ரவிச்சந்திரன் நன்றியுரை வழங்கினார்.

## கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில்

# கோயம்புத்தூர் ரோட்டரி கிளப் ஆஃப் ரைஸ் அமைப்பின் முதலாண்டு நிறைவு விழா, 2026,27ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடைபெற்றது



கோயம்புத்தூர் ரோட்டரி கிளப் ஆஃப் ரைஸ் அமைப்பின் முதலாண்டு நிறைவு விழாவும், 2026-2027 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நிகழ்சியும் கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில், உள்ள தனியா உணவக அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ரொட்டேரியன் மகேஸ்வரன் கிளப்பின் தலைவராகவும், ரொட்டேரியன்கள் சரவணன் செயலாளராகவும், அருண்பிரசாத் பொருளாளராகவும் பதவியேற்றனர். விழாவின் ஒரு பகுதியாக சமூக சேவை திட்டங்கள் தொடங்கப்பட்டன. கே.கே. புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கணிப்பொறிகள் வழங்கப்பட்டன. மேலும் ஏழை குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டது.போத்தனூர் பகுதியில் உள்ள பேமிலி கேர் சில்ரன்ஸ் என்ற அறக்கட்டளையில் உடல்நலம் குறைந்து வாழும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ரோட்டரி மாவட்ட நிர்வாகிகளான ரொட்டேரியன் காட்வின், சுவாமிநாதன், ராமகிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் குட்டப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்துரை வழங்கினர். கிளப் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஏராளமானோர் இவ்விழாவில் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர் என்பது குறிப்பிட த்தக்கது.

# தென்காசியில் இளம் தொழில்முனைவோருக்கான CEDOI சந்திப்பு நிகழ்ச்சி



தென்காசி மாவட்டத்தில் CEDOI அமைப்பின் சார்பில் இளம் தொழில்முனைவோருக்கான சந்திப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எம். திவ்யா மணிகண்டன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் ஆற்றிய சிறப்புரையில், புதிய தொழில் முயற்சிகள் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது காலத்தின் தேவையாகும் என்று வலியுறுத்தினார்.

இளைஞர்கள் தன்னம்பிக்கையுடன் புதிய தொழில் களைத் தொடங்கி, தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக, திவ்யா மணிகண்டன் அவர்களுக்கு விழாக்குழுவின் சார்பில் பொன்னாடை அணிவித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒப்பந்தக்காரர் மணிகண்டன், பல்வேறு துறை அலுவலர்கள், இளம் தொழில் முனைவோர் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# பாப்பாக்குடி அருகே பயணிகள் நலன் கருதி நிழற்கூடம் அமைக்க கோரிக்கை



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தாலுகா, குத்தபஞ்சான் கிராமத்திற்குட்பட்ட ஆழ்வான் துலுக்கப்பட்டி விலக்கு பகுதியில், அம்பை- ஆலங்குளம் பிரதான சாலையோரத்தில் அமைந்துள்ள பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் அமருவதற்கான நிழற்கூட வசதி இல்லாததால் பொதுமக்கள் சிரமம் அடைந்து வந்தனர்.

இந்நிலையில், பயணிகள் அமருவதற்காக பாப்பாக்குடி வட்டார காங்கிரஸ் தலைவர் தினகரன் தனது சொந்த செலவில் கற்களால் அமரும் வசதியை ஏற்படுத்தியுள்ளார்.

எனினும், மழை மற்றும் வெயிலில் இருந்து பயணிகளை பாதுகாக்க அந்த இடத்தில் மேல் கூரையுடன் கூடிய நிழற்கூடம் அமைத்து வழங்க சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிகழ்வில்டி ஆர் எஸ் கோயில் பிள்ளை, துதி, தங்கராஜ், அந்தோணி, ஸ்டீபன் சேட், சாமிதாஸ், ஸ்டாலின், புஸ்பராஜ், உள்பட காங்கிரஸ் நிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் மாநில பொதுக்குழு உறுப்பினரும், தற்போதைய காங்கிரஸ் தொழிலாளர் யூனியன் மாநில துணைத்தலைவருமான குளம் ராஜேந்திரனை, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி பிரிவு மாவட்ட தலைவராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஐ.பிரபு மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார். இச்சந்திப்பின் போது அவர் பொன்னாடை அணிவித்து, வாழ்த்து மற்றும் ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

# சங்கரன்கோவிலில் நகராட்சி முன்பு விசைத்தறி தொழிலாளர்கள் போராட்டம்



சங்கரன்கோவிலில் 20 சாயப்பட்டறை கழிவுநீர் மையத்தை மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூட உத்தரவிட்டது. இந்நிலையில் எந்த முன்னறிவிப்பும் இன்றி 10.07.2026 அன்று கரண்ட் கட் செய்ததால் விசைத்தறி தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 2000-க்கும் மேற்பட்ட விசைத்தறி கூடங்கள் உள்ளன. இதில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்தரவின் பேரில் 10.07.2026 அன்று மதியம் திடீரென பல்வேறு விசைத்தறி கூடங்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. முறையான நோட்டீஸ் வழங்காமல் கரண்டை துண்டித்ததால் ஆயிரக்கணக்கான தறிகள் முடங்கின. இதனால் வேலை இழந்த தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டன. இதனால் விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தவறான போக்கை கண்டித்து நகராட்சி அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்

தகவலறிந்து வந்த காவல்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மேலும் தொழிலாளர்கள் அனைவரும் நகராட்சியிலிருந்து நடந்து சென்று சங்கரன்கோவில் கோட்டாட்சியர் கோரிக்கைகள் அடங்கிய மனுவை கோட்டாட்சியரிடம் அளித்தனர். கோட்டாட்சியர் முறையாக விசாரணை செய்து ஒத்துழைப்பு கொடுப்பதாக கூறியதை அடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

மேலும் விசைத்தறி தொழிலாளர்கள் கூறுகையில்: சங்கரன்கோவிலில் பிரதானத் தொழில் விசைத்தறி மட்டுமே. இதை நம்பி பல்வேறு குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் இருக்கின்றன. அரசாங்கம் முறையான சாயக்கழிவுகள் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும், அது நிறைவேறும் வரை கால வாசம் வேண்டும் எனவும், அவ்வாறு கால அவகாசம் இருந்தால் மட்டுமே தொடர்ந்து விசைதறி தொழில் இயங்கும் எனவும் தெரிவித்தனர்.

# கோவையில் பள்ளி மாணவர்கள் இணைந்து நடத்திய விழிப்புணர்வூட்டும் பேரணி!

## குழந்தைகள் மீதான வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுத்த கோவை வித்யா மந்திர் பள்ளி மாணவர்கள்




ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பான மற்றும் அன்பான சூழலை உறுதி செய்ய வேண்டியது நம் சமூகத்தின் மிக முக்கியக் கடமையாகும். இதனை வலியுறுத்தும் நோக்கில் கோவை வித்யா மந்திர் பள்ளி சார்பில் குழந்தைகள் மீதான வன்முறைக்கு எதிரான ஒரு மாபெரும் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. "ஒவ்வொரு குழந்தையையும் பாதுகாப்போம் - குழந்தைகள் மீதான வன்முறையைத் தடுப்போம்" என்ற வலிமையான முழக்கத்துடன் பள்ளி வளாகத்திலிருந்து தொடங்கிய இப்பேரணி, பிருந்தாவன் கார்டன் பகுதி வரை சென்றடைந்தது. தங்கள் கைகளில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் முழக்கங்களை எழுப்பியவாறு வீதிகளில் அணிவகுத்துச் சென்றனர். மாணவர்களின் இந்த ஒழுக்கமான மற்றும் அர்த்தமுள்ள அணிவகுப்பு,அங்குதிரண்டிருந்த பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. வன்முறையின் அறிகுறிகளை எவ்வாறு கண்டறிவது, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு எவ்வாறு ஆதரவளிப்பது மற்றும் பாதுகாப்பான கலாச்சாரத்தை எப்படி உருவாக்குவது என்பதை மிக எளிமையாக மக்களிடம் கொண்டு சேர்த்த மாணவர்களின் இந்த நேர்மையான முயற்சியைப் பொதுமக்கள் பலரும் பாராட்டினர். இறுதியாக ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளையும் பாதுகாப்பையும் காப்போம் என்றும், அவர்கள் அச்சமின்றி அன்பான சூழலில் வளர்வதற்கான சமுதாயத்தை உருவாக்குவோம் என்றும் மாணவர்கள் அனைவரும் உறுதியாக உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், ம.விஜய் பாலாஜி ஆகியோர் தலைமையில்

# மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுவது குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான முன்னேற்பாடு பணிகள் குறித்த கூட்டம்





வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் தலைமையில் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுவது குறித்து அனைத்துதுறை அலுவலர்களுடனான முன்னேற்பாடு பணிகள் குறித்த கூட்டம் நடைபெற்றது.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சக்தி திருமண மண்டபத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் தலைமையில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் (25.07.2026) அன்று மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுவது குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான முன்னேற்பாடு பணிகள் குறித்த கூட்டம் (11.07.2026) அன்று நடைபெற்றது.


ஈரோட்டில் அமைச்சர் பெருமக்கள் பேசும் போது தெரிவித்ததாவது, மாவட்டத்தில் 2026-27 ஆம் நிதியாண்டில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் கோபிசெட்டிபாளையம், பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வருகின்ற 25.07.2026 அன்று காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமினை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்ககம் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை இணைந்து நடத்த உள்ளன. இம்மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 200-க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு 10,000 க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்ப உள்ளனர். இம்முகாமில் சுமார் 5,000-க்கும் மேற்பட்ட வேலைநாடுநர்கள் பங்கேற்க உள்ளார்கள். இவ்வேலை வாய்ப்பு முகாமில் 8 ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு தேர்ச்சி, பட்டப்படிப்பு, டிப்ளமோ, நர்சிங், பார்மஸி மற்றும் பொறியியல் பட்டம் படித்தவர்கள், கணினி இயக்குபவர்கள், ஓட்டுநர்கள் பங்கு பெறலாம். இம்முகாமில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு பதிவு குறித்த வழிகாட்டுதல்கள், இலவச திறன் பயிற்சிக்கான பதிவுகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட உள்ளது. இந்த வேலைவாய்ப்பு முகாம்களில் படித்த இளைஞர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்புகளை பெற்று தங்கள் தகுதிகளை மேம்படுத்தி கொண்டு தங்கள் வாழ்வில் முன்னேற வேண்டும். இம்முகாம் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் பொறுப்பு அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி ஈரோடு மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிட வழிகாட்டிட வேண்டும் என தெரிவித்தார்கள்.

ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் வெள்ளிக்கிழமை ஒவ்வொரு மாதமும் 3-ஆவது வெள்ளிக்கிழமை சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாமில் சுமார் 30-க்கும் மேற்பட்ட வேலையளிக்கும் நிறுவனங்கள் மற்றும் 150-க்கும் மேற்பட்ட வேலைநாடுநர்கள் வேலைவாய்ப்பு முகாம்களில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு பெற்று வருகின்றார்கள். மேலும் ஆண்டுதோறும் 2 மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் பெரிய அளவில் நடத்தப்படுகிறது. இதில் ஒவ்வொரு முகாமிலும் 200-க்கும் மேற்பட்ட வேலையளிக்கும் நிறுவனங்கள் மற்றும் சுமார் 4,000 வேலைநாடுநர்கள் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு, கோவை) ஆ.ஜோதிமணி, உதவி இயக்குநர் (மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்) ரா.ராதிகா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி, கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வாலாஜாபேட்டையில் அரசு நிலம் ஆக்கிரமிப்பு: அகற்றக்கோரி வட்டாட்சியர் மற்றும் அதிகாரிகளிடம் பொதுமக்கள் புகார்





வாலாஜாபேட்டை நகராட்சி 14-வது வார்டில் அமைந்துள்ள திரௌபதி அம்மன் கோவில் சுற்றுவட்டாரப் பகுதியில், 50 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுமக்கள், வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ் போக்குவரத்திற்குப் பயன்பட்டு வரும் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தை (நகர புல எண்: 2126), தனிநபர்கள் சிலர் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருவதாகப் புகார் எழுந்துள்ளது. இதுகுறித்து "உதவும் பறவைகள்" பொதுநல சேவை அமைப்பின் தலைவர் க. குமார் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் இணைந்து வாலாஜாபேட்டை வட்டாட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

அந்தமனுவில், கோவிலுக்கு எந்தவித சட்டபூர்வ அங்கீகாரமும் இல்லாத நிலையில், தங்களை நிர்வாகி மற்றும் தலைவர் எனக் கூறிக்கொள்ளும் இருவர், அரசு அனுமதியின்றி வணிக நோக்கத்திற்காகக் கடைகளைக் கட்டி வாடகைக்கு விட முயல்வதாகவும், இதுகுறித்து தட்டிக்கேட்ட பொதுமக்களுக்கு முரணான பதில்களை அளித்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த 27-05-2024 அன்று நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர நில அளவையரிடம் அளிக்கப்பட்ட புகாரின் பேரில், அதிகாரிகள் இடத்தை அளவீடு செய்து "சர்க்கார் நத்தம்" என்று சான்றளித்து, ஆக்கிரமைப்பாளர் ராஜேந்திரனை எச்சரித்துச் சென்றனர். ஆனால், அதிகாரிகள் சென்ற பிறகு, தான் ஒரு அரசியல் கட்சியின் முன்னாள் நகர செயலாளர் என்று கூறிக்கொண்டு, புகார் அளித்தவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொலை மிரட்டல் விடுத்த ஆக்கிரமிப்பாளர், தொடர்ந்து சட்டவிரோத கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு, அந்த இடத்திற்குப் பட்டா பெறவும் முயன்று வருகிறார். எனவே, பொதுமக்களின் வழித்தடத்தை மறித்து இடையூறாகக் கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, அரசு நிலத்தை மீட்டுத் தர வேண்டும் என இப்புகார் மூலம் மாவட்ட ஆட்சியர், நகராட்சி ஆணையாளர் மற்றும் காவல் துறையினருக்குப் பொதுமக்கள் சார்பாக பணிவுடன் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு; தென்காசி மாவட்டம் வீரசிகாமணியில் 10 ஆம் ஆண்டு விளையாட்டு போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா



தென்காசி மாவட்டம் வீரசிகாமணியில், பெருந்தலைவர் கு. காமராஜர் அவர்களின் 124-வது பிறந்தநாளை முன்னிட்டு காமராஜர் இளைஞரணி சார்பில் 10-ஆம் ஆண்டு விளையாட்டு போட்டிகள், கல்விப்பரிசு வழங்கும் விழா மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது

இதன் ஒரு பகுதியாக, ஜூலை 11,ம் தேதி அன்று அங்குள்ள பெருந்தலைவர் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது பின்னர் பல்வேறு விளையாட்டு ப் போட்டிகள் தொடங்கப்பட்டது ஜூலை 14 அன்று நாட்டாமை சரத்குமார் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து ஜூலை 15 அன்று பொதுமக்களுக்கு அன்னதானம், வழங்கப்பட்டு விளையாட்டு போட்டிகள், மற்றும் கல்வியில் முதல் பெண் பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு வழங்கப்பட்டு மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது

இந்நிகழ்ச்சிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வீரசிகாமணி காமராஜர் இளைஞரணி நிர்வாகிகள் லிங்க மாடசாமி, எல் கே மூர்த்தி, துரைராஜ், ராமசாமி, அருண்குமார், மணிகண்டன், மாரிச்செல்வம், க. ராமர் மற்றும் காமராஜர் நற்பணி மன்ற இளைஞர்கள் செய்திருந்தனர்..

DHINATH DHALAM Morning Tamil Daily 13.07.2026



## கடையம் அருகே ஐந்தாங்கட்டளையில் தீ விபத்து: சேதமடைந்த நெல் சேமிப்பு கிடங்கில் அமைச்சர் வெங்கடரமணன் ஆய்வு

தென்காசி மாவட்டம், கடையம் அருகே ஐந்தாங்கட்டளை பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் செயல்பட்டு வரும் திறந்தவெளி நேரடி நெல் கொள்முதல் மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஏராளமான நெல் மூட்டைகள் எரிந்து சேதமடைந்தன.

இந்த நிலையில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கடரமணன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

சேதமடைந்த நெல் மூட்டைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் அவர் விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர்செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் வெங்கடரமணன், "நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மற்றும் அரிசி மூட்டைகளை பாதுகாப்பாக சேமிப்பது குறித்து சமீபத்தில் சென்னையில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த நிலையில் ஐந்தாங்கட்டளையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த விபத்தில் தலா 40 கிலோ எடையுடைய சுமார் 450 முதல் 500 நெல் மூட்டைகள் வரைஎரிந்து சேதமடைந்துள்ளன. திறந்தவெளி நெல் சேமிப்பு கிடங்குகள் அனைத்தும் மேற்கூரையுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், கண்காணிப்பு கேமராக்கள், சுற்றுச்சுவர் மற்றும் தீயணைப்பு கருவிகள் உள்ளிட்ட பாதுகாப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படும்" என்றார்.

மேலும், "கடந்த பிப்ரவரி மாதம் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் புதிய ஸ்மார்ட் ரேஷன் கார்டுகள் வழங்கும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. விரைவில் 50 ஆயிரம் பேருக்கு புதிய ஸ்மார்ட் ரேஷன் கார்டுகள் வழங்கப்படும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் வெங்கடலெட்சுமி, மாவட்ட வழங்கல் அலுவலர் பால்துரை, ஆலங்குளம் வட்டாட்சியர் பரமசிவன், த.வெ.க. மாவட்ட செயலாளர் விபின் சக்கரவர்த்தி, ராஜபிரகாஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## மேல்விஷாரம் அபோல்லோ கே.எச். மருத்துவமனையில் துயில்கான் 2.0 தேசிய தூக்க மருத்துவ மாநாடு நிறைவு

### தூக்கக் குறைபாடுகளுக்கான நவீன சிகிச்சை முறைகள் குறித்து தேசிய அளவிலான மருத்துவ நிபுணர்கள் பங்கேற்பு




ராணிப்பேட்டை மாவட்டம் மெல்விஷாரத்தில் உள்ள அபோல்லோ கே.எச். மருத்துவமனையின் காது, மூக்கு, தொண்டை (ENT) துறை சார்பில் "துயில்கான் 2.0" (THUYILCON 2.0) என்ற இரண்டாவது ஆண்டு தேசிய தூக்க மருத்துவ மாநாடு 11 மற்றும் 12 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது.

"Strengthening the Basics" என்ற கருப்பொருளில் நடைபெற்றஇந்தமாநாடு, இந்திய தூக்க மூச்சுத்திணறல் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் (IASSA) ஆதரவுடன் நடத்தப்பட்டது. நாடு முழுவதும் இருந்து காது, மூக்கு, தொண்டை மருத்துவர்கள், தூக்க மருத்துவ நிபுணர்கள், முதுநிலை மருத்துவ மாணவர்கள் மற்றும் பல்வேறு மருத்துவத் துறை வல்லுநர்கள் இதில் பங்கேற்றனர்.

மாநாட்டின் முதன்மை ஆதரவாளராக பத்மஸ்ரீ பேராசிரியர் டாக்டர் மோகன் காமேஸ்வரன் செயல்பட்டார். மாநாட்டு தலைவராக பேராசிரியர் டாக்டர் ஜலகண்டன், செயலாளராக டாக்டர் சங்கர சுப்ரமணியன், ஒருங்கிணைப்பாளர்களாக முகமது நியாமத்துல்லா மற்றும் டாக்டர் முகமது தப்ரேஸ் பி.ஜி.ஆகியோர்பொறுப்பேற்று மாநாட்டை சிறப்பாக நடத்தினர்.

மாநாட்டில் தூக்கக் குறைபாடுகள் மற்றும் Obstructive Sleep Apnoea (OSA) நோயை கண்டறிதல், சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை முறைகள் குறித்துதேசிய அளவிலான மருத்துவ நிபுணர்கள் விரிவான உரைகள் வழங்கினர். மருத்துவர்களிடையே கருத்துப் பரிமாற்றம், கலந்துரையாடல் மற்றும் கேள்வி-பதில் அமர்வுகளும் நடைபெற்றன. Adenoidectomy, Tonsillectomy, Drug Induced Sleep Endoscopy (DISE), Barbed Pharyngoplasty, Turbinate Correction Techniques உள்ளிட்ட பல்வேறு நேரடி அறுவைச் சிகிச்சைகள் காட்சிப்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் நவீனஅறுவைச்சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களுக்குசெய்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மாநாட்டின் முக்கிய அம்சமாக, குறைந்த எண்ணிக்கையிலான மருத்துவர்களுக்காக ஒருவருக்கு ஒருவர் (One-to-One) பயிற்சி வழங்கும் Hands-on Workshop நடைபெற்றது. இதில் Polysomnography, Drug Induced Sleep Endoscopy, Coblation Assisted Procedures, Rhinomanometry, OSA நோயாளிகளுக்கான சிகிச்சை முடிவெடுத்தல், CPAP பயன்பாடு உள்ளிட்ட தலைப்புகளில் நேரடி செய்முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

மேலும், முதுநிலை மருத்துவ மாணவர்களுக்காக பேராசிரியர் ஆண்டனி இருதயராஜன் நினைவு சிறந்த மின்-போஸ்டர் (E-Poster) விளக்கப் போட்டி நடத்தப்பட்டு, சிறந்த மூன்று ஆய்வுக்கட்டுரைகளுக்கு பரிசுகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

மாநாட்டில் பங்கேற்ற மருத்துவர்கள், தூக்க மருத்துவத் துறையில் உருவாகி வரும் புதிய சிகிச்சை முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களைநேரடியாகஅறிந்து கொள்ளும் அரிய வாய்ப்பாக இந்த மாநாடு அமைந்ததாக தெரிவித்தனர். தூக்கக் குறைபாடுகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதோடு, நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை வழங்கும் திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்த மாநாடு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## Typhoon Bavi weakens, China to receive heavy rains as storm expected to turn



China's National Meteorological Center said Typhoon Bavi weakened to a severe tropical storm on Sunday morning after making landfall in Zhejiang.

The storm is expected to turn northeast in eastern Anhui on July 13 before moving into the northern Yellow Sea and gradually transitioning into an extra-tropical cyclone, the center said.

Heavy rainfall is forecast through July 14 across Fujian, Zhejiang, Jiangxi, Anhui, Jiangsu, Shandong and parts of northeastern China, with forecasters warning of a high risk of rain-related disasters. Some areas of Anhui, Zhejiang and Jiangxi could see extremely heavy downpours, while strong winds may affect shipping, offshore operations and aquaculture along China's eastern coast.

China's transport ministry raised its emergency response for heavy rainfall to Level II on Sunday and maintained a Level III response for typhoons after the national weather forecaster issued an orange rainstorm alert and a yellow typhoon alert.

China's National Development and Reform Commission has allocated 100 million yuan ($14 million) from the central budget to support emergency recovery efforts in Zhejiang, Xinhua News Agency reported. The funds will be used to repair damaged roads, water conservancy projects, schools and hospitals as authorities seek to restore normal production and daily life. The planning agency also allocated an additional 100 million yuan to support post-typhoon recovery efforts in the province of Guangxi, Xinhua said in a separate report.

The storm is expected to approach the latitude of Shanghai by Sunday evening, the local authority said in a WeChat post. Authorities advised residents to ensure doors and windows are securely closed, avoid going out unless necessary, and remain alert to the risk of falling objects outdoors.

## தென்காசியில் சாமர்த் ஜவுளித்துறை திறன் மேம்பாட்டுத் திட்டச் சான்றிதழ் வழங்கும் விழா




இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் 'சாமர்த்' திட்டத்தின் கீழ் ஜவுளித் துறை திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை முடித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா தென்காசி- குற்றாலம் மெயின் ரோடு, சிந்தாமணியில் அமைந்துள்ள ஈவிஎம் கார்மெண்ட்ஸ் வளாகத்தில் நடைபெற்றது

நிகழ்ச்சியை தர்மரத்தினா டெக்ஸ்டைல் பிரைவேட் லிமிடெட், வேலு சோஷியல் ஆக்டிவ் பப்ளிக் சேரிடபிள் டிரஸ்ட் மற்றும் ஈவிஎம் கார்மெண்ட்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து விழாவினை ஒருங்கிணைத்திருந்தனர்.

விழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் வேலு டிரஸ்டின் நிர்வாக அறங்காவலர்

முருகன் வரவேற்புரை வழங்கினார்.

டிஆர்டிபிஎல் ஸ்கில்ஸ் அமைப்பின் பி.டி.எம் கே. மாரிதுரை மற்றும் ஒருங்கிணைப்பாளர் எஸ்.மணிகண்டன் ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

விழாமுடிவில்,ஈவிஎம் கார்மெண்ட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஆர். அனுசியா நன்றியுரை வழங்கினார்கள்

## காட்டலங்குளத்தில் மாவீரன் அழகுமுத்துக்கோனின் 316வது பிறந்தநாள் விழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் மரியாதை செலுத்தினர்



இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த மாவீரன் அழகுமுத்து கோன் அவர்களின் 269-வது பிறந்தநாள் விழா, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே உள்ள கட்டாரன்குளத்தில் அமைந்துள்ள அவரது நினைவு மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத் தலைவர் பெருமாள்சாமி வழிகாட்டுதலின்படி நடைபெற்ற இந்த நிகழ்விற்கு,கோவில்பட்டி நகரத் தலைவர் அருண்பாண்டியன் மற்றும் வட்டாரத் தலைவர் ரமேஷ்மூர்த்தி ஆகியோர் தலைமை தாங்கினர்.

நிகழ்வில், மாவீரன் அழகுமுத்து கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் காங்கிரஸ் கட்சியின் முக்கியப் பொறுப்பாளர்கள் மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட நிர்வாகிகள் ஆறுமுகம், ஐ.என்.டி.யு. சி. ராஜாசேகர், எஸ்.எம். டி.எஸ். ராஜா, துரைராஜ், பொறியாளர் ராஜா முத்துராமலிங்கம், சுந்தர்ராஜ், கிருபாகரன் மற்றும் இளைஞர் காங்கிரஸ் மாவட்டப் பொதுச் செயலாளர் அரவிந்த் ஆகியோர் கலந்துகொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.




நெல்லை மாவட்டம் வள்ளியூரில் முதல் சுதந்திர போராட்ட தியாகி வீரன் அழகுமுத்துக்கோன் அவரது 269வது குருபூஜையை முன்னிட்டு அன்னாரது படத்திற்கு நெல்லை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் திராவிட முன்னேற்ற கழக தலைமை செயற்குழு உறுப்பினருமான சா.ஞானதிரவியம் மலர் மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தி மரியாதை செலுத்தினார் இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பணகுடி வள்ளியூரில் விடுதலைப்போராட்ட வீரர் அழகுமுத்துகோனின் குருபூஜை விழா; நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் கிரகாம்பெல் மரியாதை



இந்திய விடுதலைப் போராட்ட வீரர், ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பாளையக்காரர் மாவீரன் அழகுமுத்துகோன் அவரது

269-வது குருபூஜையை முன்னிட்டு திருநெல்வேலி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ம. கிரகாம்பெல் தலைமையில் பணகுடி பேருந்து நிலையம் மற்றும் வள்ளியூர் பழைய பேருந்து நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சுதந்திர போராட்ட தியாகி மாவீரன் அழகுமுத்து கோன் அவர்களின் திருவுருவ படத்திற்கு திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

இதில் மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் நம்பி வள்ளியூர் பேரூர்செயலாளர்சேதுராமலிங்கம், பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி, அவைத்தலைவர் அன்பரசு, வள்ளியூர் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் கண்ணன், ஜான்சி ராஜம் .கோபி கோபால கண்ணன், தில்லை ராஜா. சுரேஷ், சுரேஷ் பாக்கியம், சிவா, லெட்சுமணன். உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.